## பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

## கொள்கைத் தவறுகள்

1. வணக்கத்தை அல்லாஹ் அல்லதோருக்கு செலுத்தல் : மரணித்தவர்களிடம் பிரார்த்தித்தல், ஜின்கள், இறைநேசர்கள், ஷேஹ்மார்கள் போன்ற அல்லாஹ் அல்லாதோரைக் கொண்டு பாதுகாப்புத் தேடல், அவர்களுக்காக அறுத்துப் பலியிடல், நேர்ச்சை போன்ற சில வணக்கங்களை இங்கு உதாரணமாகக் கொள்ளலாம். இறைவன் பின்வருமாறு கூறுகின்றான் : நீர் கூறும் ““மெய்யாக என்னுடைய தொழுகையும், என்னுடைய குர்பானியும், என்னுடைய வாழ்வும், என்னுடைய மரணமும் எல்லாமே அகிலங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே சொந்தமாகும். ““அவனுக்கு யாதோர் இணையுமில்லை - இதைக் கொண்டே நான் ஏவப்பட்டுள்ளேன் - (அவனுக்கு) வழிப்பட்டவர்களில் - முஸ்லீம்களில் - நான் முதன்மையானவன் (என்றும் கூறும்). (அல் அன்ஆம் : 162, 163). மேலும் கூறுகிறான் : ““அன்றியும், நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ்வுக்கே இருக்கின்றன, எனவே, (அவற்றில்) அல்லாஹ்வுடன் (சேர்த்து வேறு) எவரையும் நீங்கள் பிரார்த்திக்காதீர்கள். (அல்ஜின் : 18). மேலும் கூறுகிறான் : மேலும் அவர், ““மலக்குகளையும், நபிமார்களையும் (வணக்கத்திற்குரிய இரட்சகர்களாக) ரப்புகளாக எடுத்துக் கொள்ளுங்கள்”” என்றும் உங்களுக்குக் கட்டளையிடமாட்டார் - நீங்கள் முஸ்லிம்களாக (அல்லாஹ்விடமே முற்றிலும் சரணடைந்தவர்கள்) ஆகிவிட்ட பின்னர் (நீங்கள் அவனை) நிராகரிப்போராகி விடுங்கள் என்று அவர் உங்களுக்குக் கட்டளையிடுவாரா? (ஆலுஇம்ரான் : 80). மேற்கூறப்பட்டோரை அல்லாஹ்வுக்கும் அடியானுக்குமிடடையில் தரகர்களாகவோ அல்லது பரிந்துரைப்பவர்களாகவோ எடுத்துக் கொள்வதும் இணைவைப்பில் உட்படக்கூடியது. அல்லாஹ் கூறுகிறான் : இன்னும், அவனையன்றிப் பாதுகாப்பாளர்களை எடுத்துக் கொண்டிருப்பவர்கள், ““அவர்கள் எங்களை அல்லாஹ்வின் அருகே சமீபமாகக் கொண்டு செல்வார்கள் என்பதற்காகவே யன்றி நாங்கள் அவர்களை வணங்கவில்லை””

(என்கின்றனர்). அவர்கள் எதில் வேறுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ அதைப்பற்றி நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கிடையே தீர்ப்பளிப்பான் பொய்யனாக நிராகரித்துக் கொண்டிருப்பவனை நிச்சயமாக அல்லாஹ் நேர்வழியில் செலுத்த மாட்டான். (அஸ்ஸுமர் : 03).

2. சமாதிகளைச் சுற்றுதல் (தவாப்), அதன் மீது பள்ளிகள் கட்டுதல், அதனை முன்னோக்கித் தொழுதல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ் யூத, கிறிஸ்தவர்களை சபிப்பானாக. அவர்கள் தமது நபிமார்களுடைய சமாதிகளை வணக்கஸ்தலங்களாக எடுத்துக் கொண்டார்கள். (புஹாரி, முஸ்லிம்). மேலும் கூறினார்கள் : மனிதர்களில் மிகவும் தீயோர் யாரெனில், மறுமை ஏற்படும் போது உயிரோடிருப்போரும், சமாதிகளை வணக்கஸ்தலங்களாக எடுப்போருமே. (அஹ்மத்).

3. சூனியக்காரர், சாஸ்திரக்காரர் மற்றும் குறிபார்ப்போரிடத்தில் செல்லல் : அவர்கள் கூறுவதை யார் உண்மைப்படுத்துகிறாரோ அவர் நிராகரித்துவிடுவார். அவர்களிடம் சென்று உண்மைப்படுத்தாவிட்டால் (சென்ற குற்றத்திற்காக) அவருடைய 40 நாட்களுடைய தொழுகைகள் ஏற்கப்படமாட்டாது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எவன் சாஸ்திரக்காரனிடம் சென்று அவன் சொல்பவற்றை உண்மைபடுத்தினால் அவன் முஹம்மத்(ஸல்) அவர்கள் மீது இறக்கப்பட்டதை நிராகரித்து விட்டான். (அபூதாவூத், அஹ்மத்). மேலும் கூறினார்கள் : எவன் சாஸ்திரக்காரனிடம் அல்லது குறிபார்ப்பவனிடம் செல்கின்றானோ அவனுடைய 40 நாட்களுடைய தொழுகை ஏற்கப்படமாட்டாது. (முஸ்லிம்). அவர்களுடைய பொய்களை சமூகத்திற்கு தெளிவுபடுத்தும் பொருட்டு அது பற்றிய அறிவும் துணிவும் உள்ளோர் அவர்களிடத்திலே செல்வது சில சந்தர்ப்பங்களில் கடமையாகவோ விரும்பத்தக்கதாகவோ மாறிவிடும்.

4. நபி (ஸல்) அவர்கள் விடயத்தில் அளவுகடந்து செல்லல் : ஒரு வானவரோ, மனிதனோ, ஜின்னோ அடைந்து கொள்ள முடியாத

உயர்ந்த மகத்துவமிக்க ஓர் இடம் நபியவர்களுக்குண்டு என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. மறுமையில் பெரிய பரிந்துரைக்குரியவரும், அதிக மக்களால் பின்பற்றப்படுபவராகவும் அவரே உள்ளார். அவர்கள் எங்கள்மீது கொண்ட பற்றின் காரணமாகத்தான் அவர்கள் விடயத்தில் அளவு கடந்து செல்வதைத் எங்களுக்குத் தடுத்தார்கள். பின்வருமாறு கூறினார்கள் : கிறிஸ்தவர்கள் மர்யமுடைய மகன் ஈஸா (அலை) அவர்களை (அளவுக்கதிகமாக) உயர்த்தியது போன்று நீங்கள் என்னை உயர்த்த வேண்டாம். நான் ஓர் அடியான் மட்டுமே. எனவே என்னைப் பற்றி ‘அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதரும்’ என்றே கூறுங்கள். (புஹாரி). நபி (ஸல்) அவர்களுக்கு மறைவான அறிவு இருப்பதாகவும், இவ்வுலகமே அவருக்காகத்தான் படைக்கப்பட்டது என வாதிடுதல், அவர்களிடத்தில் பாவமன்னிப்புத் தேடுதல், சுவனத்தில் நுழைவிக்கக் கேட்டல், அவருடைய சமாதியைத் தரிசிக்கவென்றே பிரயாணம் மேற்கொள்ளல், அவர்களின் பொருட்டால் இறைவனிடத்தில் வேண்டுதல், அவர்களுடைய சமாதியைத் தொட்டு பரகத் தேடுதல், அல்லது அவர்களிடத்தில் தமது தேவைகளைக் கேட்டல், அவர்களுடைய சமாதி இருப்பதால்தான் மதினாவிற்கே சிறப்புள்ளது என்று நம்பிக்கை கொள்ளல் போன்றன நபி (ஸல்) அவர்கள் விடயத்தில் அளவு கடந்து செல்வதற்கான சில எடுத்துக்காட்டுகளாகும்.

5. அல்லாஹ் அல்லாதோர் மீது சத்தியம் செய்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் அல்லாஹ் அல்லாதவர் மீது சத்தியம் செய்கின்றாரோ அவர் இறை நிராகரிப்பாளர் ஆகிவிட்டார் அல்லது இணைவைத்து விட்டார். (அபூ தாவூத், திர்மிதீ, அஹ்மத்).

6. சூனியம், பொறாமை, கண்ணூறு போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற தாயத்து, மணிகள், நூற்கள் போன்றவற்றை கட்டுதல் : இவை அனைத்தும் தனித்து நின்று பொறாமை, கண்ணூறு போன்றவற்றிலிருந்து தடுக்குமென ஒருவன் எண்ணினால் அது பெரிய இணைவைப்பாகும். அதுவே தீங்கிலிருந்து தடுக்கக் காரணமாக

உள்ளதென்று நினைத்தால் அது சிறிய இணைவைப்பாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மந்திரித்தல், தாயத்துக்கள், வசப்படுத்தும் வார்த்தைகள் போன்றன இணைவைப்பாகும். (அபூ தாவூத், இப்னு மாஜா.·., அஹ்மத்).

7. அல்லாஹ் தஆலா எங்கும் இருக்கின்றான் என்று கூறுதல். இதனால் அல்லாஹ் மலசலகூடம் மற்றும் அசுத்தமான இடங்களில் எல்லாம் இருக்கின்றான் என்று கூற நேரிடும். அல்லாஹ் அவற்றை விட்டும் உயர்ந்தவன். இறைவன் கூறுகிறான் : வானத்தில் இருப்பவன் உங்களைப் பூமியில் சொறுகிவிடுவான் என்பதை பற்றி நீங்கள் அச்சமற்று இருக்கிறீர்களா? அப்போது (பூமி) அதிர்ந்து நடுங்கும். (அல் முல்க் : 16). மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீங்கள் என்னை நம்பமாட்டீரா? நானோ வானிலிருப்பவனாகிய அல்லாஹ்வின் நம்பிக்கைக்குரியவனாக இருக்கின்றேன். எனக்கு காலையிலும் மாலையிலும் வானிலிருந்து செய்தி வருகின்றது. (புஹாரி, முஸ்லிம்).

8. தொழுகையை விடுதல் : இது மார்க்கத்தை விட்டும் வெளியேற்றும் ஒரு குப்ரை ஏற்படுத்தும் செயலாக இருந்தும் இவ்வாறு தொழுகையை விடுவது முஸ்லிம்கள் மத்தியில் பரவலாக உள்ளது. நபியவர்களின் பின்வரும் கூற்றுக்கமைய நபித்தோழர்களும் தொழுகையை விடுவது குப்ரு என்பதில் ஏகோபித்துள்ளனர். அந்நபிமொழி பின்வருமாறு : நல்ல மனிதனுக்கும் இறைநிராகரிப்பு மற்றும் இணைவைப்பிற்கும் இடையில் உள்ள வேறுபாடு தொழுகையை விடுவதாகும். (முஸ்லிம்).

9. இறைநிராகரிப்பாளர்களுக்கு ஒப்பாகுதல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் இன்னொரு சமூகத்திற்கு ஒப்பாகின்றாரோ அவர் அவர்களையே சார்ந்தவராவார். (அபூ தாவூத்).

10. அடிப்படைக் கொள்கைக்கு முரணான வார்த்தைகளைத் தவிர்ந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் உனக்கு அநீதியிழைப்பானாக, அல்லாஹ் உனக்கு துரோகமிழைப்பானாக, அவர் தனது கடைசி ஒதுங்குமிடத்திற்குச் சென்றுவிட்டார், எங்களுடைய இறைவனே நீ

அவனுடைய புத்தியை செயற்படுத்திக் கொள் போன்ற கருத்துள்ள சொற்களை அரபியிலோ ஏனைய மொழிகளிலோ பயன்படுத்துவதைத் தவிர்ந்து கொள்ள வேண்டும். அதே போன்று ‘என்னுடைய இறைவனே நீ (எனக்கு) என்ன செய்தாய்’ போன்ற அல்லாஹ்வுடைய விதியில் குறுக்கிடுவதிலிருந்தும் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

எல்லாப்புகழும் இறைவனுக்கே!


ஆக்கம் : கலாநிதி அஹ்மத் அல்மிஸ்யத்

தமிழில்

M. அஹ்மத் (அப்பாஸி)